அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 01/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
1992, சனவரி 09 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
பகுதிச் செயலாளர்கள் அனைவருக்கும்.

அரசாங்க பணியாளர்களுக்கும் ஓய்வூதிய பெறுநர்களுக்கும் ரூபா 100/- மேலதிகப் படியொன்றை வழங்குதல்.

---

தொடக்க இணைந்த மாதச் சம்பளமாக 3000/- ரூபாவிற்குக் குறைந்த சம்பள அளவுத்திட்டத்திலிருக்கும் சகல அரசாங்க பணியாளர்களுக்கும் தற்போதய படிகளுடன் கூடுதலாக 100/- ரூபாவைக் கொண்ட மாதாந்த மேலதிக படியொன்று 1992 சனவரி 01 ந் திகதி தொடக்கம் வழங்கப்படல் வேண்டும்.

02. இந்த மாதாந்தப்படி இதே அடிப்படையில் சகல ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும். இந்நோக்கத்திற்கான சம்பளம் அவர்களுக்கு உரித்துடைய குறைக்கப்படாத ஓய்வதியமாகும்.

03. இந்தப் படியானது மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 21 நாட்கள் என்ற அடிப்படையில் விகிதசமமாக அவர்கள் பணியாற்றும் நாட்களின் எண்ணிக்கையின் மீது சகல அமயப்பணியாளர்களுக்கு பதிற்கடமையாற்றும் பணியாளர்களுக்கும் கூட வழங்கப்படல் வேண்டும்.

04. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தான அதே அடிப்படையில் இப்படியானது உள்ளூராட்சிப்பணியாளர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

05. இப்படி வழங்கலை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டை செலவுகளின் கொடுப்பனவிற்கான செலவு விடயக்குறியீட்டின் கீழ் பெற முடியாமலிருக்கும் போது பிற மீண்டு வரும் விடயங்களில் சேமிப்புக்கள் ஏதாவதிருந்தால் அவற்றிலிருந்து அந்த ஏற்பாடு கணக்கு வகை மாற்ற அதிகார நடைமுறைக்கு அமைவாகப் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இந்த விதத்தில் நிதியங்கள் விடுவிக்கப்படமுடியாமலிருந்தால் மட்டுமே மேலதிக ஏற்பாட்டிற்கான விண்ணப்பமொன்று கணிப்பு செய்யப்படும் அடிப்படையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி வரவு செலவுத்திட்டப்பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. இச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒருப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.